இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 04

**EPU4236– முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் தொழில் வாண்மை வகிபங்கு**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 09.03.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி I

1. "இலங்கையின் ஆரம்பக் கல்வி கலைத்திட்டம் மூன்று கற்பித்தல் மூலங்களைக் கொண்டுள்ளது".

   இந்த மூன்று (03) மூலங்களையும் பட்டியலிட்டு இவை எவ்வாறு முதன்மைநிலை ஒன்றிலிருந்து முதன்மைநிலை மூன்று வரை மாற்றமடைகின்றனவென விளக்குக.

2. பெஞ்சமின் புளூமின் கல்வி இலக்குகளின் பகுப்பியல் என்பதனை சுருக்கமாக விளக்குக. பெஞ்சமின் புளூமின் கல்வி இலக்குகளின் பகுப்பியலில் உள்ள கீழ் மட்ட செயலொழுங்கு, உயர் மட்டச் செயலொழுங்கு என்பவற்றை பட்டியலிடுக.

3. "ஆசிரியரொருவர் பிள்ளைகளின் முன்னறிவை விளங்கிக் கொள்வதற்காகவும் பிள்ளைகளின் முன்னறிவை புதிய தகவல்களுடன் தொடர்புபடுத்துவதற்காகவும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும்".

   ஆசிரியரென்ற வகையில் உங்களின் வகுப்பு மாணவரின் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தினை கற்பிக்கும் போது மேலுள்ள கூற்றினை எவ்வாறு பிரயோகிப்பீர்கள்?

4. இணைப்புவாத அணுகுமுறை தொடர்பாக ஆசிரியரின் வகிபங்கினை விளக்குக.

5. கணிப்பீடு என்னும் பதத்தினை வரையறுத்து அதன் முக்கியத்துத்தினை விளக்குக.

6. கற்பித்தல் உபாயங்களை பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றினையும் சுருக்கமாக விளக்குக.

7. "பொது அறிவை பகிரும் திறன்கள்" என்பதனால் நீங்கள் கருதுவது யாதென விளக்குக.

8. ஆரம்ப வகுப்பு ஆசிரியரென்ற வகையில் உமது வகுப்பு மாணவரின் வெற்றிகரமான கற்றலை எவ்வாறு ஊக்கப்படுத்துவீர்கள்?

**(05 x 08 = 40** புள்ளிகள்)

## பகுதி II

9. "இலங்கையின் ஆரம்பப் பிரிவு பிரதானமாக இரண்டு வகையான தேர்ச்சிகள் காணப்படுகின்றன".

(i) இந்த இரண்டு வகையான தேர்ச்சிகளையும் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

(ii) விருத்திநிலைக் கணிப்பீடு (இடைநிலைக் கணிப்பீடு), தொகுத்தறிக் கணிப்பீடு (இறுதிநிலைக் கணிப்பீடு) ஆகிய பதங்களை வரையறுக்க.

**(06 புள்ளிகள்)**

(iii) "நியமம்சார் கணிப்பீடானது நியதிசார் கணிப்பீட்டிலும் சிறந்ததாகும்".
இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

**(08 புள்ளிகள்)**

10.

(i) "கற்றல் சூழல்" என்னும் பதத்தினை வரையறுக்க.

**(05 புள்ளிகள்)**

(ii) முன்பள்ளியிலும் ஆரம்பப் பாடசாலையிலும் பயிலும் பிள்ளைகளுக்கு நேரான கற்றல் சூழலை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தினைக் கலந்துரையாடுக.

**(05 புள்ளிகள்)**

(iii) முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு அல்லது ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளுக்கு எவ்வாறு தூண்டக்கூடிய வகுப்பறையை வடிவமைப்பீர்கள் என விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

11.

(i) "கற்பித்தல்முறை சார்ந்த வாண்மைத்துவம்" என்னும் பதத்தினால் கருதப்படுவது யாது?

**(06 புள்ளிகள்)**

(ii) கற்பித்தல்முறை சார்ந்த வாண்மைத்துவத்தின் முக்கியத்துவம் யாது? **(07 புள்ளிகள்)**

(iii) நீங்கள் எவ்வாறு வினைத்திறன் மிக்க ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக முடியும் என விளக்குக.

**(07 புள்ளிகள்)**

12. "ஆசிரியர்கள் நான்கு பிரதான வகிபாகங்களை வகிக்க வேண்டும்". என புச்வோகர் (2000) (Buchberger, 2000) குறிப்பிட்டார்.

(i) இந்த நான்கு (04) வகிபாகங்க்ளையும் குறிப்பிட்டு அவற்றினை சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் தற்போதைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் நிலையை பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

13.

(i) பின்வரும் பதங்களை வரையறுக்க.
அ) ஆசிரியர் மையக் கல்வி
ஆ) கற்போன் மையக் கல்வி

(08 புள்ளிகள்)

(ii) "ஆசிரியர் மையக் கல்வியில் இருந்து கற்போன் மையக் கல்வியை நோக்கி மாற வேண்டியது அவசியமானதாகும்".
நீங்கள் மேலுள்ள கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உமது விடையை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(12 புள்ளிகள்)**

-முழுப்பதிப்புரிமையுடையது-